Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month **8 Pages** 


# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 19 Click - 08
NOVEMBER 2023 Re. 1


**அறிவிப்பு**

நமது சங்கத்தின் மாத இதழான CVPA NEWS ன் PDF File மாதத்தின் இறுதி வாரத்தில் அதாவது 25 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதிக்குள் சங்க உறுப்பினர்களின் மொபைல் போனுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

இப்படிக்கு
**நியூஸ் ஆசிரியர்**






சென்னை, மயிலாப்பூர் சாந்தோம், பகுதியில் அமைந்துள்ள இமேஜ் கிரியேட்டிவ் கல்வி நிறுவனம் சார்பில் அங்கு பயிலும் மாணவர்களுக்கு புகைப்பட போட்டி நடத்தியது. இப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா அந்நிறுவனம் சார்பில் நடைபெற்றது. நமது சங்கத்தின் சார்பாக, கௌரவத் துணைத் தலைவர் யோகா அவர்களும், தலைவர் செல் செல்வம் அவர்களும் ,செயலாளர் பிரேம்குமார் அவர்களும் கலந்து கொண்டு அனைவருக்கும் பரிசு வழங்கினார்கள். இதில் ரிஷ்வந்த் என்ற மாணவர் முதல் பரிசை வென்றார்.

## 2024ஆம் ஆண்டிற்கான CVPA டைரி டிசம்பர் மாத இறுதிக்குள் வழங்க சிறப்பு ஏற்பாடு

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்!

நமது சங்கத்திற்கு நீங்கள் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவு கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். நமது சங்கத்தின் பொதுக்குழு முடிவிற்குப் பிறகு, அங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தற்போது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அதன்படி செப்டம்பர் மாதம் நடைபெற்ற ரெனிவரில் பொதுக்குழு தீர்மானப்படி பெண் புகைப்படகலைஞர்களுக்குசந்தாதொகையில் 30 சதவீதமும், மாற்றுத்திறனாளியா உள்ள புகைப்பட கலைஞர்களுக்கு சந்தா தொகையில் 50 சதவீதம் சலுகைகள் முதல் முறையாக இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

செப்டம்பர் மாத ரெனிவல் மிகவும் சிறப்பாகவே இருந்தது. நமது சங்கத்தின் பொதுக்குழு தீர்மானத்தை ஏற்று, அதற்கு மதிப்பளித்து மாற்றி அமைக்கப்பட்ட சந்தா தொகையை செலுத்திய ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் எங்கள் நிர்வாகத்தின் சார்பாகவும் செயற்குழுவின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். செப்டம்பர் மாத ரெனிவலின்படி, இரண்டு பெண் புகைப்பட கலைஞர்கள் மற்றும் இரண்டு மாற்றுத் திறனாளி புகைப்படக் கலைஞர்கள் உட்பட 26 பேர் நமது சங்கத்தில் புதிய உறுப்பினர்களாக இணைந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அதேசமயம், இரண்டு பெண் புகைப்படக் கலைஞர்கள் உட்பட 337 சங்க உறுப்பினர்கள் தங்கள் அடையாள அட்டையை ரெனிவல் செய்து கொண்டனர் என்பதையும் உங்கள் அனைவருக்கும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

நமது சங்க உறுப்பினர்கள் மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளும் வகையில் அப்போலோ மருத்துவமனையுடன் நமது சங்கம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன்படி சிகிச்சைக்கு ஏற்றவாறு 20% முதல் 30 சதவீதம் வரை சலுகை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் விபரங்களை அப்போலோ மருத்துவமனை நிர்வாகமே அடுத்த இதழில் வெளியிட உள்ளது. சங்க உறுப்பினர்கள் இதை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முன்பெல்லாம் நமது சங்கத்தில் நடைபெறும் பொதுக்குழு கூட்டம், குடும்ப விழா, ஒர்க் ஷாப், டைரி ,காலண்டர், பாக்கெட்டைரி, நியூஸ் பேப்பர் போன்றவைகளுக்கு நம் தொழில் சார்ந்த முக்கிய நிறுவனங்கள் தாராளமாக விளம்பரம் கொடுத்து வந்தனர். நமது சங்கத்தின் வளர்ச்சியில் விளம்பரதாரர்களின் பங்கு மிக முக்கியமாக இருந்துள்ளது என்பதை கடந்த காலங்களில் நாம் அனைவரும் பார்த்து வந்திருக்கிறோம். இந்த நிலை தற்போது தலைகீழாக மாறிப் போய் உள்ளது. இதை இந்த ஆண்டு வெளியிடப் போகும் டைரியின் விளம்பரதாரர்களை அணுகிய போது அவர்களிடம் கிடைத்த அனுபவத்தை வைத்து சொல்கிறோம். இதே நிலை நீடித்தால், இனி வருங்காலங்களில் நமது சங்கம் விளம்பர வருவாயை இழக்க நேரிடும் என்பதை கூறிக் கொள்கிறோம். விளம்பரதாரர்கள் விலகிச் செல்வதற்கு பல காரணங்கள் இருந்தாலும், நமது சங்கத்திற்குள் ஒற்றுமை இல்லாதது போன்ற ஒரு மாயத் தோற்றம் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கவலை அளிக்கும்படி உள்ளது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு:

நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு.'

டிசம்பர் மாதம் முதல் வாரம் அல்லது இரண்டாம் வாரத்தில் செயற்குழுவின் ஆலோசனையை பெற்று, நமது சங்கத்தின் சார்பாக வெளிவர போகும் 2024 ஆம் ஆண்டுக்கான டைரி டிசம்பர் மாத இறுதிக்குள் உறுப்பினர்கள் அனைவருக்கும் டைரி கொடுத்து முடிக்க ஏற்பாடு செய்து வருகிறோம். சங்க உறுப்பினர்கள் எங்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

**DM. பிரேம்குமார்**, CVPA செயலாளர்.

# போட்டோ ஆல்பங்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்


ஒளிப்படத்துறையில் கடந்த சில வருடங்களாக ஏற்பட்டு வரும் தொழில் போட்டி என்பது இப்போது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிப் போயுள்ளது. திருமணம் சார்ந்த ஒளிப்பட தொழிலில் இவையெல்லாம் எப்படி நடக்கிறது! இதற்கெல்லாம் யார் காரணம் என்று யூகிப்பதற்குள், அடுத்தடுத்த விஷயங்களை நோக்கி கேள்விகள் மாறி சென்று விடுகிறது. முன் எப்போதும் இல்லாத வகையில் ஸ்மார்ட் ஃபோன்களின் தரமும், ஒளிப்பட கருவிகளின் தரமும் ஒன்றுக்கு ஒன்று இணையாக போட்டி போட்டுக் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இதனால் பொதுமக்களிடம் புகைப்படம் எடுக்கும் ஆர்வம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்வதை நாம் கண்கூடாக பார்த்து வருகின்றோம். ஆனாலும், இது எந்த வகையிலும் தொழில் முறை போட்டோ வீடியோ கலைஞர்களுக்கு பயன் அளிக்கும்படி இருக்காது.இதனால் இந்த கலைஞர்களுக்கு எந்த வகையிலும் வருமானமும் கிடைக்கப் போவதில்லை. என்று தொழில் முறை கலைஞர்கள் கவலைப்படுகின்றனர்.

திருமண ஒளிப்படத் தொழிலில் இன்று ஊருக்கு ஊர், ஒவ்வொரு பகுதியிலும், டஜன் கணக்கில் புதுப்புது ஒளிப்பட கலைஞர்கள் திருமண ஒளிப்பட கலைஞர்களாக ஊடுருவி இருக்கிறார்கள். இவர்கள்தான், இன்றைய தொழில்முறை திருமண ஒளிப்பட கலைஞர்களுக்கு சவால் விடும் வகையில் தொழில் போட்டியாளர்களாக இன்று மாறி வருகின்றனர். சமூக ஊடகம் தொடங்கி, இவன்ட் மேனேஜ்மென்ட் வரை இவர்களின் ராஜாங்கமே கொடிகட்டி பறக்கிறது. ஆடம்பர திருமணங்களை ஏற்பாடு செய்யும் இன்றைய இளம் திருமண ஜோடிகளே இவர்களின் முக்கிய இலக்காக உள்ளது. இளம் திருமண ஜோடிகளை கவர்ந்திழுக்க புதுப்புது வெட்டிங் தீம்களை உருவாக்கி, அந்த வலைக்குள் அவர்களை வீழ்த்தி விடுகின்றனர். ஏற்ற இறக்கங்களைக் கொண்ட கொட்டேஷன் தொழில் போட்டியாளர்களால் கொடுக்கப்படுகிறது. இது இத்தொழிலைச் சார்ந்தவர்களுக்கு மிகப் பெரிய தலைவலியாக அமைந்துள்ளது. இது நாள் வரை கட்டி காப்பாற்றி வந்த புகைப்படக் கலையின் வரம்புகள் அனைத்தும் இவர்களால் முழுவதுமாக மீறப்படுகின்றன. இவர்கள், முகம் சுழிக்க வைக்கும் அளவிற்கு எடுக்கும் போட்டோ சூட் ஒளிப்படக் காட்சிகளை சமூக ஊடகங்கள் மூலமாக நாம் தினம் தினம் பார்த்து வருகிறோம். டிரண்டிங் செய்யப்படும் இத்தகைய காட்சிகளை கண்டு அனைவருமே ஒருபுறம் கண்டன குரல் எழுப்பி வருகின்றனர். அனுபவம் வாய்ந்த ஒரு புகைப்படக் கலைஞரிடம் ,தொழிலில் நேர்த்தியான ஒரு தெளிவு முறைகள் இருக்கும். அது ஃபிலிமாக இருந்தாலும் டிஜிட்டலாக இருந்தாலும் சரி, இவர்கள் யாரும் புகைப்படங்களை என்றைக்கும் வரம்பு மீறி இதுவரை எடுத்ததில்லை. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு ஆஸ்தான புகைப்படக் நிரந்தரமாக இருந்தார். இவரால் எடுக்கப்பட்ட வீடியோ மற்றும் திருமண போட்டோ ஆல்பத்தை அந்த குடும்பத்தை சூழ்ந்து இருக்கும் உற்றார் உறவினர் என அனைவரும் விரும்பிப் பார்த்தனர். வீடியோவை எடிட் செய்யவும், போட்டோக்களின் இமேஜை செலக்ட் செய்யவும், இந்த கலைஞர்களுக்கு முழு சுதந்திரம் இருந்தது. அதனால் திருமணம் முடிந்து ஒரு சில நாட்களிலே வாடிக்கையாளர்களுக்கு திருமண ஆல்பம் டெலிவரியாகி விடும். ஆக, இது நாள் வரை போட்டோகிராபர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இருந்து வந்த தோழமை என்பது அளவிட முடியாத ஒன்றாக இருந்து வந்ததுள்ளது.

ஒளிப்படத் தொழிலில் இன்றுள்ள வியாபார போட்டியாளர்கள் புதுப்புது நடை முறையை கொண்டு வருகின்றனர். இதில் ஒன்றுதான் போட்டோ இமேஜ் செலக்சன் என சொல்லப்படும் புதிய பழக்கம். இன்றைய வியாபாரப் போட்டியாளர்கள் ஒரு திருமணத்தை எடுக்க ஒன்றுக்கு மூன்று கேமராக்கள் என கவர் செய்கின்றனர். இதிலிருந்து மொத்தமாக ஐந்தாயிரம் முதல் பத்தாயிரம் வரையிலான போட்டோ இமேஜ்களை அப்படியே வாடிக்கையாளர்களிடம் கொடுத்து விடுவதாக கூறுகின்றனர். இப்போது இதிலிருந்து 300 போட்டோ இமேஜ்களை செலக்ட் செய்து கொடுக்குமாறு புதுமண ஜோடிகளுக்கு சொல்லி தப்பித்துக் கொள்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நடைமுறையில் இல்லாத ஒரு வழக்கத்தை இவர்கள் இப்போது கொண்டு வந்து விட்டனர். பல இடங்களில் புதுதிருமண ஜோடிகள் இதையே வழக்கமாக வைத்துக் கொண்டு நேர்த்தியான தொழில் முறை கலைஞர்களிடமும் டிஜிட்டல் இமேஜை அப்படியே கேட்கின்றனர். இன்றைய இளம் ஜோடிகள் போட்டோ இமேஜ்களை தங்கள் சிஸ்டத்தில் அப்படியே ஸ்டோர் செய்து வைத்துக் கொள்கின்றனர். இன்னும் சிலர் இதோ அதோ என்று இழுத்து அடித்து ஒரு வருடம் கழித்து செலக்ட் செய்து தருவதாக கூறுகின்றனர். நாம் இங்கே குறிப்பிடுவது ஒரு சில உதாரணங்கள் மட்டுமே . இன்னும் குறிப்பிட்டு சொல்லாமல் இருப்பது எண்ணிக்கையில் அடங்காது. இதுபோன்ற அணுகுமுறை ஒரு பக்கம் இருந்தாலும், புதிய ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மூன்று மணி நேரத்தில் திருமண ஆல்பத்தை ரெடி செய்து திருமண மேடையிலேயே ஆல்பத்தை டெலிவரி செய்வதாக சொல்கிறார்கள். அதை எல்லா தொலைக்காட்சி செய்திகளிலும் செய்தி வருமாறு செய்து, பரபரப்பை ஏற்படுத்துகின்றனர். இத்தொழில் எவ்வித வசதியும் இல்லாத அந்த காலத்திலேயே இதையெல்லாம் எவ்வித பரபரப்பும் இன்றி நமது மூத்த புகைப்பட கலைஞர்கள் எப்போதோ செய்து காட்டி விட்டனர் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். இன்றைய தொழில் போட்டியாளர்கள் ஆர்வத்தின் காரணமாக செய்யும் தவறான நடைமுறையால் பாதிக்கப்படுவது என்னவோ இத்தொழிலை நேர்த்தியாக செய்து வரும் லட்சக்கணக்கான ஒளிப்படக் கலைஞர்கள் மட்டுமே என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பது இவர்கள் அனைவரின் எண்ணமாக உள்ளது.

பல ஊர்களில் திருமண ஜோடிகளிடம் கொடுக்கப்பட்ட லட்சக்கணக்கான டிஜிட்டல் இமேஜ்கள் கம்ப்யூட்டருக்குள் முடங்கிப் போய் இருப்பதால், ஒளிப்பட கலைஞர்களுக்கு பெரும் அளவில் வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு புறம் இருக்க, போட்டோ பிரிண்ட்டுகள் ஆல்பமாக தயாராகும் நிலை குறைந்து போனதால், பெரும்பாலான கலர் லேப்கள் மேற்கொண்டு நடத்த முடியாமல் திணறி வருகின்றனர். இதைவிட மோசமான நிலை நமது பக்கத்து மாநிலமான கேரளாவில் கலர் லேப் தொழில் பெரும் அளவில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாகவும் கூறுகின்றனர்.

இதுவரை VHS, DV, HD, 4K போன்ற பார்மெட்டுகளில் வீடியோ கவரேஜ் செய்யப்பட்டது. இவற்றை CD, DVD, BLU RAY, PEN DRAIVE, HARD DISK, போன்ற பிளே மீடியாவில் சேமித்து கொடுத்து வந்தோம். தொழில்நுட்ப மாற்றத்தால் வாடிக்கையாளர்களிடம் இருந்து வந்த பிளேயர்கள் பல இடங்களில் காணாமல் போய்விட்டன. எனவே ஆயிரக்கணக்கில் செலவு செய்து இப்போதைய மீடியாக்களில் கன்வர்ட் செய்ய வேண்டிய நிலைக்கு வாடிக்கையாளர்கள் தள்ளப்பட்டு வருகின்றனர். ஒரு சாரார் திருமண ஆல்பங்கள் என்பது எப்போதும் நிரந்தரமானவை என்பதை நன்றாக உணர்ந்துள்ளனர். திருமண ஆல்பங்களை எத்தனை வருடங்கள் கழித்து நாம் பார்த்தாலும் அதில் கிடைக்கும் இன்பம் என்பது வேறு வகையானது. வருங்காலங்களில் இவையெல்லாம் எப்படி மாறப்போகிறது, என்கிற கவலைதான் இன்றைய ஒளிப்படத் தொழிலில் மறைந்து காணப்படுகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.



நமது சங்க உறுப்பினர் ரவி ஆறுமுகம் அவர்களின் மகள் ஆர்த்தி - சுமன் இவர்களின் திருமணம் மற்றும் திருமண வரவேற்பு நிகழ்ச்சி சென்னை ராயபுரத்தில் நடைபெற்றது. மணமக்களுக்கு நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.



தென் சென்னை, கோடம்பாக்கம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் மதுபாலன் ஸ்டுடியோ, முருகன் அவர்களுடைய மகன் மதுபாலன்-சர்மிளா இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் அருண் டிஜிட்டல் ரவிச்சந்திரன் அவர்களுடைய மகள் திலகவதி ( எ) அணு - தமிழன் இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகளும் பகுதி செயலாளர்களும் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்தினார்கள்.



தென் சென்னை சைதாப்பேட்டை பகுதியை சார்ந்த நமது சங்க உறுப்பினர் விவேகா - சாரதா இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை புளியந்தோப்பு பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் ஆரிப் அவர்களுடைய மகள் ஹீரோ நான் தான் அனீஸ் பாத்திமா மூன்றாம் வகுப்பில் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு மாவட்ட அளவில் பரிசு வென்றுள்ளார். இவருக்கு நமது சங்கம் சார்பாக நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.



மத்திய சென்னை, சூளை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினரும், கணேஷ் வீடியோவின் நீண்ட நாள் ஊழியருமான திரு A.குமார் அவர்கள் இம்மாதம் இயற்கை எய்தினார் . அன்னாருக்கு நமது சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகளும் ,செயற்குழு உறுப்பினர்களும் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் நமது சங்கத்தின் சார்பாக சங்க உறுப்பினர்களுக்கு ரெனிவலை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் ஈம சடங்கு தொகை பத்தாயிரம் ரூபாயை சங்க நிர்வாகிகள் குமார் அவர்களின் குடும்ப வாரிசுகளிடம் வழங்கினார்கள் . அன்னாரது ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

# எக்ஸ்போசர் வேல்யூ-Exposure Value

புலிவலம் ரவி (திருச்சி)-9442777240

போட்டோகிராபி பிலிம் பார்மேட்டில் படம் எடுத்தவர்கள் இந்த வார்த்தையை அதிகம் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள். ஆனால் டிஜிட்டல் கேமரா மற்றும் மிர்ரர்லெஸ் கேமராவிற்கு வந்த பிறகு இந்த வார்த்தையை பயன்படுத்தாமல் எந்தவொரு ஒளிப்படக்கலைஞரும் இருக்க முடியாது. நீண்ட நாட்களாகவே இதை பற்றி எழுத வேண்டுமென்று நினைத்த ஒரு சப்ஜெக்ட் எக்ஸ்போசர் வேல்யூ ஆகும். EV என்பதன் விரிவாக்கம் Exposure Value ஆகும். இதைப்பற்றி இக்கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்.

அபர்ச்சரில் F/1.0, F/1.4, F/2.0, F/2.8, F/4.0, F/5.6, F/8.0, F/11, F/22,etc., என்பதில் ஒவ்வொரு அபர்ச்சரின் மதிப்பும் ஒரு ஸ்டாப் (Stop) என்பதாகும்.

சட்டர் ஸ்பீடில் 30s, 15s, 8s, 4s, 2s, 1s, 1/2s, 1/4s, 1/8s, 1/15s, 1/30s, 1/60s, 1/125s, 1/250s, 1/500s, 1/1000s, 1/2000s, 1/4000s, 1/8000s,1/16000s, 1/32000s,1/64000s என்பதில் ஒவ்வொரு சட்டர் ஸ்பீடின் மதிப்பும் ஒரு முழு அளவு (ஸ்டாப்) என்பதாகும்.

ஒளி உணர்வு தன்மையில் (ISO Sensitivity) 50, 100, 200, 400, 800, 1600, 3200, 6400, 12800, 25600, 51200, 102400 etc., என்பதில் ஒவ்வொரு ஒளி உணர்வு தன்மையின் மதிப்பும் ஒரு முழு அளவு (ஸ்டாப்) என்பதாகும்.

போட்டோகிராபியில் அபர்ச்சர், சட்டர் ஸ்பீடு, ஒளி உணர்வு தன்மை போன்றவைகளை எக்ஸ்போசர் எலிமென்ட்ஸ் என பொதுவாக அழைப்பது வழக்கம்.

அதே போல அபர்ச்சரில் மட்டுமே ஒவ்வொரு மதிப்பையும் P-ஸ்டாப் என அழைப்பதுண்டு. மற்ற இரண்டு எக்ஸ்போசர் எலிமென்ஸ்களான சட்டர் ஸ்பீடு, ஒளி உணர்வு தன்மையின் ஒவ்வொரு மதிப்பையும் ஸ்டாப் என பெரும்பாலும் அழைப்பதில்லை.

எனவே மேலேக்கண்ட எக்ஸ்போசர் எலிமென்ட்ஸ் ஒவ்வொன்றையும் ஸ்டாப் என அழைக்க காரணம் காரணம் என்னவெனில், சற்று விளக்கமாக கூறுவதென்றால் அபர்ச்சர், சட்டர் ஸ்பீடு, ஒளி உணர்வு தன்மை போன்றவைகளில் ஒரு ஸ்டாபிற்கும், அதற்க டுத்துள்ள ஸ்டாபிற்கும் அதாவது ஒரு முழு அளவு எண்ணிற்கும், அதற்கடுத்துள்ள முழு அளவு எண்ணிற்கும் இடையேயுள்ள ஒளியின் மதிப்பு ஸ்டாப் (Stop) என்பதாகும் அல்லது அந்த எண்ணை ஸ்டாப் என்று கூறலாம்.

ஆனால் நிக்கான் கேமராவில் (மற்ற நிறுவன கேமராக்களிலும்) அபர்ச்சர், சட்டர் ஸ்பீடு, ISO Sensitivity போன்றவை களில் ஒரு முழு அளவு எண்ணிற்கும், அதற்க டுத்துள்ள ஒரு முழு அளவு எண்ணிற்கும் இடையேயுள்ள ஒளியின் அளவை 1 ~JpÇ[µ\| H¯hµ| என குறிப்பிடுகின்றனர்.

நிக்கான் கேமராவில் எக்ஸ்போசர் வேல்யுவை, 1EV, ½ EV, 1/3 EV என பிரித்து பயன்படுத்தியுள்ளனர். இதை 1 Step, 1/2 Step, 1/3 Step என குறிப்பிடுகின்றனர். (இதை பொதுவாக Full Stop, Half Stop, One Third Stop என்றும் போட்டோகிராபியில் குறிப்பிடுவதுண்டு).

அதாவது அபர்ச்சர், சட்டர் ஸ்பீடு, ISO Sensitivity போன்றவைகளில் ஒரு முழு அளவு (1EV) ஸ்டாப்பில் கிடைக்கும் ஒளியின் அளவை, ½ EV, 1/3 EV என பிரித்து ஒளியை இமேஜ் சென்சாருக்கு அனுப்புகிறது என்பதாகும். அதாவது ஒரு முழு அளவு எண்ணிற்கும், அதற்கடுத்துள்ள ஒரு முழு அளவு எண்ணிற்கும் இடையேயுள்ள ஒளியின் அளவான ஒரு எக்ஸ்போசர் வேல்யூவை (1EV) இரண்டு சம அளவு ஒளியாக பிரித்து அதில் ஒரு பங்கு ஒளியையும் (½ EV), அதே போல மூன்று சம அளவாக பிரித்து அதில் ஒரு பங்கு (1/3 EV) ஒளியையும் இமேஜ் சென்சாருக்கு அனுப்புகிறது என்பதாகும்.

இது நிக்கான் கேமராவில் கஸ்டம் செட்டிங்ஸ் மெனு பகுதியில் அபர்ச்சருக்கும், சட்டர் ஸ்பீடிற்கும் EV Steps for Exposure Control என்பதில் அமைத்துள்ளனர். ஒளி உணர்வு தன்மைக்கு ISO Sensitivity Step Value என்பதில் அமைத்துள்ளனர். இதில் நாம் 1 Step, 1/2 Step, 1/3 Step என நாம் படமெடுக்கும் சூழ்நிலைக்கு தகுந்தவாறு அல்லது நமது விருப்பத்திற்கிணங்க அமைத்துக்கொள்ளலாம்.

சில நிக்கான் கேமராக்களில் 1 Step, 1/2 Step, 1/3 Step மட்டுமே இருக்கும் அதுபோன்ற சமயங்களில் 1 Step தேவைப்படுபவர்கள் கஸ்டம் செட்டிங்ஸ் மெனுவின் கண்ட்ரோல் பகுதியில் உள்ளே சென்று கேமராவின் வெளியிலுள்ள பங்சன் பட்டன்களில் ஏதாவது ஒன்றில் 1 Step Exposure value அமைத்துக்கொள்ளலாம்.

தற்போது 1EV, ½ EV, 1/3 EV என்னவென்பதை உதாரணங்களுடன் காண்போம். அப்ரச்சரில் f/5.6 to f/8 என்பது 1 EV ஆகும். F5.6, F6.7, F8 என்பது 1/2EV BS®. ;. F5.6, F6.3, F7.1, F8 என்பது 1/3EV ஆகும்.


சட்டர் ஸ்பீடில் 1/60 to 1/125 என்பது 1 EV ஆகும். 1/60, 1/95, 1/125 என்பது 1/2EV ஆகும் 1/60, 1/80, 1/100, 1/125 என்பது 1/3EV ஆகும்.


ஒளி உணர்வு தன்மையில் (ISO Sensitivity) 100 to 200 என்பது 1 EV ஆகும். 100, 150, 200 என்பது ½ EV ஆகும். 100, 125, 160, 200 என்பது 1/3EV ஆகும்.


மேலேக்கண்டவாறு அப்ரச்சர், ஷட்டர் ஸ்பீடுகளின் எக்ஸ்போசர் வேல்யூக்களை கேமராவில் EV Steps for Exposure Control பகுதியில் சென்று மாற்றும்போது, மாணிட்டரில் எக்ஸ்போசர் இன்டிகேட்டரில் பாயிண்டின் அளவீடுகளும் மாறும். அதே போல இதை மாற்றும்போதே எக்ஸ்போசர் காம்பன்சேசனின் மதிப்பின் அளவும், ப்ளாஸ் காம்பன்சேசன் மதிப்பின் அளவும், எக்ஸ்போசர் ப்ராக்கெட்டிங் பகுதியின் மதிப்பின் அளவும் மாறும் என்பதை நினைவில் கொள்க.

இது போன்று அப்ரச்சர், ஷட்டர் ஸ்பீடு, மற்றும் ISO Sensitivity பகுதிகளில், ஒரு எக்ஸ்போசர் வேல்யுக்களை இரண்டாக பிரித்து, மூன்றாக பிரித்து பயன்படுத்தும் அட்டவனையை கீழே படத்தில் காணலாம்.

இதுபோன்று போட்டோகிராபியின் தொழில் நுட்பங்கள் ஒவ்வொன்றையும் முழுமையாக கற்றுக்கொண்டு படமெடுக்கும் போது அந்த போட்டோகிராபி முழுமை அடையும் என்பதே உண்மை. நன்றி நண்பர்களே. மீண்டும் இது போன்ற ஒரு கட்டுரையில் உங்களை சந்திக்கிறேன். அன்புடன் அட்மின் தமிழ்நாடு கேமரா டெக்னிக்கல் க்ளப்.




**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**

Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

**If undelivered please return to**
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 28.11.2023

To